இந்தியாவிலேயே

இரட்டை இலக்க வளர்ச்சியை எட்டியுள்ளது தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு!

சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஆக. 8 -

தமிழ்நாடு இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளது குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சி விகிதத்தை எட்டிக் காட்டியுள்ள ஒரே அரசு தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு!

இந்தியாவிலேயே அதிகபட்சமாக 9.69% பொருளாதார வளர்ச்சியுடன் தமிழ்நாடு முதலிடம் என்று கூறி வந்தோம் அல்லவா...

அதையும் தாண்டி, தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 11.19% என ஒன்றிய அரசின் திருத்தப்பட்ட மதிப்

மீட்டில் வெளியாகியுள்ளது!

இதற்கு முன்பு, இரட்டை இலக்க வளர்ச்சி எட்டப்பட்டது 2010-11 ஆம் ஆண்டில். அப்போது கலைஞர் ஆட்சி! இப்போது கலைஞர் வழி நடக்கும் திராவிட மாடல் ஆட்சி! இரண்டுமே கழக ஆட்சி!

2030ஆம் ஆண்டுக்குள் One Trillion Dollar பொருளாதாரம் என்ற போது பலரது புருவமும் உயர்ந்தது. "இது மிக உயர்ந்த இலக்கு, எப்படி சாத்தியமாகும்?" என்றார்கள்! இதே வேகத்தில் சென்றால், எதுவும் சாத்தியம் என்பது இப்போது மெய்ப்பிக்கப் பட்டு விட்டது!

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின் (குறள் 666)

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப் பிட்டுள்ளார்.

திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஒன்றியம், ஊதியூர் பழனி பாதயாத்திரை மண்டபத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் நடைபெற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு குறித்த சிறப்பு முகாமினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பார்வையிட்டனர். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா, செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்துறை) கார்த்திகேயன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சு.சந்திரசேகர், சிவ.செந்தில்குமார் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில்

2538 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகள்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக.8-

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 2538 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.8.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் உதவிப் பொறியாளர், உதவி பொறியாளர் (திட்டமிடல்), இளநிலைப் பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர், வரைவாளர், பணி மேற்பார்வையாளர், நகர திட்டமிடல் ஆய்வாளர் / இளநிலை பொறியாளர் (திட்டமிடல்), பணி ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 2538 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை மேம்படுத்துதல், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், நகர்ப்புர வசிப்பிடங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட பாதாள சாக்கடைத் திட்டம், மழைநீர் வடிகால் திட்டம், சாலை மேம்பாட்டுப் பணிகள், நகர்ப்புர ஏழைகளுக்கு குடியிருப்புகளை ஏற்படுத்தல் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டங்களை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இத்துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெற காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படுகின்ற நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகளின் இயக்குநரகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் கற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியில் காலியாக உள்ள உதவி பொறியாளர், உதவி பொறியாளர் (திட்டமிடல்), இளநிலைப் பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர், வரைவாளர், பணி மேற்பார்வையாளர், நகர திட்டமிடல் ஆய்வாளர் / இளநிலை பொறியாளர் (திட்டமிடல்), பணி ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகிய பணியிடங்களை நிரப்பிட 2.2.2024 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில், அண்ணா பல்கலைகழகம் மூலமாக 29.06.2024, 30.06.2024 மற்றும் 06.07.2024 ஆகிய நாட்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டய படிப்பு கல்வித் தகுதிக்கான பதவிகளுக்குரிய எழுத்துத் தேர்வுகள் தனித்தனியாக நடத்தப்பட்டு 20.09.2024 அன்று நேர்முகத் தேர்விற்குத் தேர்வு செய்யப்பட்ட நபர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 7.10.2024 முதல் 17.02.2025 வரை நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு 17.02.2025 அன்று தேர்வாளர்கள் பெற்ற மதிப்பெண்கள் வெளியிடப்பட்டது. தேர்வு எழுதிய 1,12,955 நபர்களில் 6,606 நபர்கள் தகுதியானவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் மதிப்பெண்கள் வெளியிடப்பட்டன. இக்காலியிடப்பணியிடங்களை நிரப்பிட 6,606 நபர்கள் பெற்ற மதிப் பெண்கள் மற்றும் இனசுழற்சி முறையில் 6,606 நபர்களுக்கு கலந்தாய்வில் கலந்து கொள்ள அழைப்பாணை அனுப்பப்பட்டது. 28.02.2025 முதல் 02.04.2025 வரை கலந்தாய்வு நடத்தப்பட்டு மதிப்பெண் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் இறுதியாக 2,538 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

மேற்படி தேர்வு செய்யப்பட்ட நபர்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படுகின்ற நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகளின் இயக்குநரகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று பணி நியமன ஆணைகள் வழங்கப் பட்டன.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், நகராட்சி நிருவாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், பேரூராட்சிகளின் இயக்குநர் எம்.பிரதீப்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இரட்டை இலக்கத்தில் பொருளாதார வளர்ச்சி!

முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஆளுமைத் திறனே காரணம்!

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பாராட்டு!

சென்னை, ஆக.8-

"இரட்டை இலக்கத்தில் பொருளாதார வளர்ச்சி என்பது முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஆளுமைத் திறனே காரணம்" என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் கூறியுள்ளார்.

இதுகுறித்து வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரிய உயரத்தை அடைந்திருக்கிறது தமிழ் நாடு. 2024-25இல், 'உண்மையான பொருளாதார வளர்ச்சி'யில் 9.69 சதவீதத்தைத் தொட்டு, இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்தது. 2032-33இல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்னும் இலக்கை அடையத் திட்டமிட்டு வரும் தமிழ்நாடு அரசு, அதை நோக்கிய பயணத்தில் உறுதியாக நடைபோடுவதை இந்தச் சாதனை உறுதிசெய்து இருந்தது.

பணவீக்கத்தைக் கணக்கில் கொள்ளாமல் மதிப்பிடப்படும் உண்மையான பொருளாதார வளர்ச்சியானது ஒரு மாநிலம் அடைந்துவரும் பொருளாதார வளர்ச்சி மீதான துலக்கமான பார்வையை அளிக்கக்கூடியது. அந்த வகையில், மத்திய புள்ளியியல் - திட்ட அமலாக்க அமைச்சகத்தின் தரவுகளின்படி 2023-24இல் ரூ.15.71 லட்சம் கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) கடந்த 2024-25இல் ரூ.17.24 லட்சம் கோடியாக உயர்ந்திருக்கிறது.

கடந்த 5 மாதங்களுக்கு முன்பு, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.69 சதவீதமாக இருந்தது. இந்த நிலையில் தற்போது 2024-25ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் பொருளாதாரம் 11.19% ஆக உயர்ந்திருப்பது, மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரியவந்துள்ளது.

இது நடப்பாண்டு தமிழ் நாடு பட்ஜெட்டில் கணிக்கப்பட்ட வளர்ச்சியை விட இது கிட்டத்தட்ட 2.2% அதிகம் எனக்கூறப்படுகிறது.

இதன் மூலம், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இரட்டை இலக்கத்தில் பொருளாதார வளர்ச்சியைப் பெற்று தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளது.

சுமார் 14 ஆண்டுகளுக்குப் பிறகு 11.19 % என்கிற இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை தமிழ் நாடு அரசு பதிவு செய்து சாதனை படைத்திருக்கும் நிலையில், இது 2025-26-ஆம் ஆண்டில் 12 சதவீதமாக உயரும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை எட்டி இருப்பதற்கு திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆளுமைத் திறன் மிக்க நடவடிக்கைகள் காரணமாகும்.

திராவிட மாடல் அரசுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் பொருளாதார வளர்ச்சியில் மேலும் உச்சம் தொட்டு இலக்கை அடைவதற்கு வாழ்த்துகிறேன்.

இவ்வாறு வைகோ அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

முதலீடுகளுக்கான முதல் முகவரி ஆகியுள்ளது தமிழ்நாடு!

முதலமைச்சரின் கூர்மதி வழிகாட்டுதலே வளர்ச்சியைப் பெற்றுத் தந்துள்ளது!

நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

சென்னை, ஆக.8-

''முதலீடுகளுக்கான முதல் முகவரி ஆகியுள்ளது தமிழ்நாடு! முதலமைச்சரின் கூர்மதி வழிகாட்டுதலே வளர்ச்சியைப் பெற்றுத் தந்துள்ளது" என்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் சென்னை அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டி வருமாறு :-

முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு - சீரான கொள்கைநெறி வழியில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளில் ஒன்று, மணிமகுடத்தில் மற்றொரு பொறித்த வைரக்கல்லாகத் தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தை எட்டி இருக்கிறது.

ஏற்கனவே நாம் சொல்லி ருக்கக்கூடிய 9.69% என்கிற அந்த GSDP உடைய இலக்கையும் தாண்டி, இன்றைக்கு 11.8% பொருளாதார குறியீடுகள் உயர்ந்து

இருக்கின்றன. ஏறத்தாழ 12% நெருங்கி வரக்கூடிய வாய்ப்பை பெற்று இருக்கிறோம்.

நம்முடைய சாதனையை நாம்தான் முறியடிக்க முடியும் என்கிற வகையில் 9.69% என்ற ஒற்றை இலக்கத்தில் இருந்த பொருளாதார வளர்ச்சி சதவீதத்தை இன்றைக்கு இரட்டை இலக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிற மகத்தான சாதனையை முதலமைச்சருடைய ஆட்சி உருவாக்கியிருக்கிறது.

இந்த இரட்டை இலக்கத்திலே பொருளாதார ஆட்சியை உருவாக்குவது, Real terms-ல் வளர்ச்சி பெறுவது என்பது கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பிலே இருந்தபோது 13% வளர்ச்சியை நாம் பெற்று இருந்தோம். அதன்பின் 14 வருடத்திற்கு பிறகு இன்றைக்கு முதலமைச்சரின் ஆட்சியில் தான் இரட்டை இலக்க வளர்ச்சியைத் தமிழ்நாடு பெற்று இருக்கிறது.

இந்திய அளவில் பல மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழ்நாடுதான் இந்த இரட்டை இலக்க வளர்ச்சியை பெற்று இருக்கிறது என்பது குறிப்பிட்டத் தக்கது. எனவே இந்த வளர்ச்சி என்பது 2030ஆம் ஆண்டு 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை எட்டுவோம் என்பதற்கு திடமான வழியை வகுத்து தந்துள்ளது.

முதலமைச்சரின் சீரிய முயற்சிகளிலான தொழில் முதலீடுகள், தொழில் முதலீடுகள் மூலம் கிடைத்த வேலை வாய்ப்புகள் என அனைத்தின் காரணமாக இந்தப் பொருளாதார வளர்ச்சி அமைந்திருக்கிறது. பொருளாதார வளர்ச்சிக்கான முழு சூழ்நிலைகளையும் நாம் உருவாக்கி இருக்கிறோம். நாம் முதலீடுகளுக்கான முதல் முகவரி தமிழ் நாடு என்கிற அளவில் முதலமைச்சர் முயற்சியின் காரணமாக ஈர்க்கப்பட்டு இருக்கக்கூடிய ஏராளமான முதலீடுகளே இந்தப் பெருமையைத் தந்து இருக்கிறது.

நிதி நிலைமையை நாம் சரியாகக் கையாண்டு இருக்கிறோம்; நாட்டின் பொருளாதாரத்தை நாம் உயர்த்தி இருக்கிறோம். கடன் வாங்குகிறார்கள் என குற்றச்சாட்டு வைக்கிறார்கள். ஆனால் வரைமுறைகளுக்கு உட்பட்டு முதலீடுகளுக்காக நாம் வாங்குகின்ற கடன்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஊக்குவித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. ஒன்றிய அரசு நமக்கு உரிய நிதிகளை விடுவிக்காத போதிலும், நமது முதலமைச்சரின் கூரிய நோக்கிலான வழிகாட்டுதல் மூலம் இந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளோம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியில் கூறினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சிங்கை சா.பழனிவேலு

ஆகஸ்ட் 8 (2020)



சிறு வயதிலேயே கழக கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது கீழத்திருப்பாலக்குடி கிராமத்தில், முன்னோடிகளை வைத்து முதன்முதலாக கழகக் கொடியேற்றி, கிளைக் கழகத்தை தொடங்கிய காரணத்தால், ஊர் பெரியவர்கள் ஒன்றுகூடி புளியங்குச்சியால் இவரை அடித்தனர்.

இளம்வயதில் சிங்கப்பூரில் தொழில் புரிந்திட சென்ற காரணத்தால், திராவிட இயக்க தலைவர்களை சிங்கப்பூர் அழைத்து, அங்கு கொள்கைப் பிரச்சாரம் செய்திட வழி செய்ததோடு, 'தமிழ் முரசு' ஏடு நடத்தி, தமிழ்மொழியை வளர்த்தவர்.

கழகத் தலைவர் அவர்கள், "தமிழைக் காக்கும் உணர்வுகளுக்கு வழிகாட்டியாக, இவர் போன்ற இலட்சக்கணக்கானோர் இருக்கும் இயக்கம்தான் தி.மு.க." என இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

சேலம் மத்திய மாவட்டம். அன்னதானப்பட்டி பகுதி, காந்திநகர், மணியனூரில் தலைவர் கலைஞரின் 102வது பிறந்தநினத்தையொட்டி மின்னொளியில் கபாடி போட்டி நடைபெற்றது. போட்டியில் வெற்றிபெற்ற அணிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன் பரிசுக் கோப்பையை வழங்கினார். உடன் சேலம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் சிவராஜ், கோட்டை பகுதி பொறுப்பாளர் இப்ராகீம், முகேஷ் ஆகியோர் இருந்தனர்.